மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 18.03.2021 அ.வ.எண்.33/2013 வா.சா.1 பார்வதி

முதல் விசாரணை தொடர்ச்சி

06.09.1983 தேதியிட்டு ஏ.என்.தருமன் என்பவரால் ராஜம்மாளின் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட கிரையசாசனத்தின் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகும். 28.11.2002 தேதியிட்டு மாண்பமை பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தால் எம்.எம்.வெங்கடாச்சல கவுண்டர் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகும். இ.பி.55/2013 ல் வழங்கப்பட்ட சுவாதீனத்திற்கான ரசீது நகல் வா.சா.ஆ.3 ஆகும். 05.06.2008 தேதியிட்ட வெங்கலாச்சல கவுண்டரின் இறப்பு சான்றின் நோட்டரி நகல் வா.சா.ஆ.4 ஆகும். வெங்கடாச்சல கவுண்டரின் வாரிசு சான்றின் நோட்டரி நகல் வா.சா.ஆ.5 ஆகும். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் நகல் வா.சா.ஆ.6 ஆகும். பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகும். 19.12.2011 தேதியிட்டு பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.8 ஆகும். 23.12.2011 தேதியிட்டு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.9 ஆகும். 02/07/2013 தேதியிட்டு முத்துக்குமார் எனக்கு எழுதி கொடுத்த பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் சான்று நகல் வா.சா.ஆ.10 ஆகும். என் பெயருக்கு வழங்கப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் சொத்து வரி ரசீதுகள் (8 எண்ணிக்கை) வா.சா.ஆ.11 ஆகும். அ.வ.24/2012 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் உண்மை நகல் வா.சா.ஆ.12 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-